පාර්ලිමේන්තු ප්‍රකාශන මාලා අංක :- 77

පරිසර අමාත්‍යාංශය

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119 (4) යටතේ ගරු අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම.

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் :- 77

சுற்றாடல் அமைச்சு

பாராளுமன்றத்தின் அரச கணக்குக் குழுவினால் முன் வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் 119 (4) இன் கீழ் கௌரவ அமைச்சரின் அவதானிப்புக்களும் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.

Parliamentary Series No :- 77

Ministry of Environment

Submission of observations of Hon. Minister and steps taken with regard to the reports tabled by the Committee on Public Accounts in terms of Standing Order No.119(4)

அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள் தொடர்பான அவதானிப்புகள் மற்றும் முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை முன் வைத்தல் - சுற்றாடல் அமைச்சு

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் 77

	குழுவினால் அடையாளம் காணப்பட்டுள்ள குறைப்பாடுகள் / குழுவினால் ழங்கப்பட்டுள்ள ஆணைகள்	குறைப்பாடுகளை சரி செய்யும் பொருட்டு முன்னெடுக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் / நடப்பு நிலை
01.	மருத்துவ கழிவுப் பொருள் முகாமைத்துவம் குறித்த செயற்பாட்டுத் திட்டம் 2019 ஒக்டோபர் 01 ஆம் திகதி முதல் செயல் வலுவிலுள்ள கழிவு முகாமைத்துவம் தொடர்பான தேசிய கொள்கை மற்றும் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் 2022.03.25 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள விதப்புரையின் பிரகாரம், மருத்துவ கழிவுப் பொருள் முகாமைத்துவம் குறித்த செயற்பாட்டுத் திட்டத்தின் தற்போதைய நிலைமை மற்றும் உரிய சகல அரசாங்க நிறுவனங்களையும் ஒருங்கிணைத்தவாறு கழிவு முகாமைத்துவம் மீதான ஒருங்கிணைந்ததொரு பொறிமுறை ஏற்படுத்தப்பட்டுள்ளதா என்பது குறித்து குழு வினவியது.	கழிவு முகாமைத்துவம் தொடர்பான தேசிய கொள்கையைச் சீராக செயற்படுத்துவதுடன் தொடர்புடைய மேற்பார்வைக்கென சுற்றாடல் அமைச்சின் செயலாளரின் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டிருப்பதுடன், தேசிய கொள்கையின் கீழ் ஒவ்வொரு கழிவு வகுதிகள் தொடர்பாகவும் அடையாளம் காணப்பட்டுள்ள பிரதான பங்குதார நிறுவனங்கள் இக் குழுவின் ஏனைய அங்கத்துவ நிறுவனங்களாக செயற்படும். அதன் பிரகாரம், அந் நிறுவனத்தினால் தொடர்புடைய கழிவு வகுதி தொடர்பான தேசிய கொள்கைக்கு ஏற்ப முன்னெடுக்கப்படுகின்ற செயற்பாடுகள் தொடர்பாக குறுகிய கால (2023 - 2024), இடைக் கால (2025 - 2026) மற்றும் நீண்ட கால (2027 - 2030) கால சட்டகத்துடன் தொடர்புடையதாக செயலாற்றுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தை செயற்படுத்துவதன் விருத்தி தொடர்பாக மேற்குறித்த குழுவிற்கு காலாண்டு ரீதியாக அறிக்கையிடப்படுகின்றது. இதன் போது தொடர்புடைய அரச நிறுவனங்கள் வசம் நிதி ஏற்பாடுகள் போதியளவில் காணப்படாமை காரணமாக அச் செயலாற்றுகை திட்டங்களை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்குத் தடைகள் ஏற்பட்டுள்ளன.
06.	கழிவு முகாமைத்துவத்தை முறையாக மேற்பார்வை செய்தல்.	மத்திய சுற்றாடல் அதிகார சபையின் ஆபத்தான கழிவு மற்றும் இரசாயனப் பதார்த்த முகாமைத்துவ அலகு மற்றும் சிசிலி ஹனாரோ என்கெயா நிறுவனத்துடன் கலந்தாலோசித்து 2023.07.01 ஆம் திகதியிலிருந்து வைத்தியசாலை கழிவுகள் கொண்டு செல்லப்படுவதை மேற்பார்வையிடும் பொருட்டு அந் நிறுவனத்தின் 09 வாகனங்கள் தொடர்பாக GPS தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திய வண்ணம் மென் பொருள் தொகுதியொன்று (GPS Tracking System) இன்றளவிலும் நிலை நாட்டப்பட்டுள்ளது. இதன் வாயிலாக வைத்தியசாலைகளிலிருந்து சிசிலி ஹனாரோ என்கெயா நிறுவனத்தின் அடுப்பு வரை வைத்தியசாலைக் கழிவுகளை கொண்டு செல்கையில் அதனுடன் தொடர்புடைய தகவல்களை அத் தொகுதியின் ஊடாக மத்திய சுற்றாடல் அதிகார சபைக்குப் பெற்றுக் கொள்ள முடியும். சிபாரிசில் குறிப்பிடப்பட்டுள்ள மூன்று மாத காலப் பகுதி உள்ளடங்கக் கூடிய வகையில் தொடர்புடைய தகவல்கள் மத்திய சுற்றாடல் அதிகார சபைக்குப் பெறப்பட்டுள்ளது. வைத்தியசாலைக் கழிவுகளை வெளியகற்றுவதுடன் தொடர்புடைய ஏனைய தகவல்கள் (வெளியகற்றப்பட்ட வைத்தியசாலைக் கழிவுகளின அளவு, வெளியகற்றும்

		செயற்பாட்டின் சுற்றாடல் காரணிகள் தொடர்பான இயைபாக்கம் போன்ற விடயங்கள்) மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் நேரடியாக சிசிலி ஹனாரோ என் கெயா நிறுவனத்தின் ஊடாகப் பெறப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.
08.	கழிவுகளை அகற்றுவதற்காக பயன்படுத்தப்படும் பொதியுறைகள் உரிய தரத்தில் காணப்படாமை.	மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் உப் ஆவணப்படுத்தப்பட்ட கழிவு முகாமைத்துவ அனுமதிப் பத்திரம் வெளியிடப்படுகையில் மேற்கொள்ளப்படுகின்ற திடல் பரீட்சிப்புகளின் போது தொடர்புடைய வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார நிறுவனங்களினால் சரியான நிறங்களைக் கொண்ட உறைகளினுள் வைத்தியசாலைக் கழிவுகள் சீராக வேறு பிரிக்கப்பட்டு மிகச் சிறந்த பாதுகாப்பு செயன் முறைகளின் வாயிலாக வெளியகற்றும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றதா எனும் விடயம் தொடர்பாக மேற்பார்வையிடப்படும். அதன் பிரகாரம், வைத்தியசாலைக் கழிவுகளை வெளியகற்றும் பொருட்டு மஞ்சள் நிறத்திலான உறைகளும், சிவப்பு நிற நாடாக்களைக் . கொண்ட மஞ்சள் நிறப் பெட்டிகளும் தொடர்புடைய வைத்தியசாலை / சுகாதார நிலையத்தினால் பயன்படுத்தப்படுவதாக அவதானிக்கப்பட்டுள்ளது. மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் வெளியிடப்பட்டுள்ள இலக்கம் 2034/33 ஐ உடைய மற்றும் 2017.09.01 ஆம் திகதிய வர்த்தமானி அறிவிப்பின் மூல பிரசுரிக்கப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளின் பிரகாரம் அனைத்து உற்பத்திகள் தொடர்பாகவும் பயன்படுத்தப்படுகின்ற பொலித்தீனின் தடிப்பு 20 மைக்ரோனை விட அதிகமாகக் காணப்பட வேண்டும். தொடர்புடைய வைத்தியசாலை / சுகாதார நிறுவனம் அவ் உறைகளின் தராதர நிலைகளைப் பேணுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்கலாம்.
09.	கழிவு முகாமைத்துவம் தொடர்பான அனுமதிப் பத்திரங்களை வெளியிடுதல்.	சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரத்திற்கு மேலதிகமாக வைத்தியசாலை/சுகாதார நிறுவனங்களினால் உப ஆவணப்படுத்தப்பட்ட கழிவு முகாமைத்துவ அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்ளுதல் கட்டாயமாகக் காணப்படுகின்றது. இதனால், இன்றளவில் அவ் · உப ஆவணப்படுத்தப்பட்ட கழிவு முகாமைத்துவ அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்வதுடன் தொடர்புடைய அறிவூட்டல்கள் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதன் பிரகாரம், தொடர்புடைய ஆபத்தான கழிவு முகாமைத்துவ அனுமதிப் பத்திரத்தை வழங்கும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்ட வண்ணமிருப்பதுடன், தேவையான மிகக் குறைந்த தகைமையையேனும் பூர்த்தி செய்துள்ள வைத்தியசாலைகள் / சுகாதார நிறுவனங்களுக்கு அனுமதிப் பத்திரத்தை வெளியிடும் செயற்பாடுகள் இன்றளவில் முன்னெடுக்கப்பட்ட வண்ணமுள்ளன.
11.	கழிவு முகாமைத்துவத்திற்கென தனியான நிறுவனமொன்றைத் தாபித்தல்.	கழிவு முகாமைத்துவம் கொள்கையின் கீழ் முகாமைத்துவப்படுத்த · வேண்டிய் ஒரு கழிவு வகுதியாக வைத்தியசாலைக் கழிவுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. வைத்தியசாலைகளின் மருத்துவக் கழிவுகளை வெளியகற்றும் செயற்பாடு மூன்று தனியார் நிறுவனங்களினால் முன்னெடுக்கப்பட்ட வண்ணமுள்ளன. மருத்துவக் கழிவு முகாமைத்துவம் தொடர்பாக மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் வருடாந்தம் திடல்

		பரீட்சிப்புகள் முன்னெடுக்கப்படுவதுடன், அதன் பிரகாரம் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் மற்றும் உப ஆவணப்படுத்தப்பட்ட கழிவு முகாமைத்துவ அனுமதிப் பத்திரத்தை வழங்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்ட வண்ணமுள்ளன. இம் மருத்துவக் கழிவு முகாமைத்துவம் தொடர்பாக சுகாதார அமைச்சுக்கு விருத்தியை அவதானிக்கும் பொருட்டு பொருத்தமான மாதிரியுறு முன் வைக்கப்பட்டிருப்பதுடன், மேற்குறித்த கொள்கையுடன் தொடர்புடையதாக அடையாளம் காணப்பட்டுள்ள குறுகிய கால, இடைக் கால மற்றும் நீண்ட கால செயற்பாடுகளின் விருத்தி தொடர்பாக காலாண்டு அடிப்படையில் அவதானிக்கப்படும். தனியார் நிறுவனங்களுடன், அரச பிரிவு கழிவுகளைக் கையாளும் விதம் தொடர்பாக தொடர்புடைய அரச நிறுவனங்களின் ஊடாக இதன் விருத்தி சம்பந்தமாக அறிக்கையிடப்படும்.
15.	மருத்துவக் கழிவுகளை தகனம் செய்வதன் மூலம் எஞ்சுகின்ற கழிவுகளை உள்ளூராட்சி நிறுவனங்களால் அகற்றப்படுதல்.	கழிவு முகாமைத்துவம் தொடர்பான தேசிய கொள்கையை செயற்படுத்துதல் தொடர்பாக சுற்றாடல் அமைச்சின் செயலாளரின் தலைமையிலும், அனைத்து பங்குதார நிறுவனங்களின் பங்குபற்றுதலுடனும் நடாத்தப்படுகின்ற தேசிய மேற்பார்வை குழுக் கூட்டத்தின் போது கலந்தாலோசிக்கப்படும். குறிப்பாக சுகாதாரத் துறையின் மருத்துவக் கழிவுகளை முகாமைத்துவப்படுத்துகையில் இவ் விடயங்கள் கருத்திலெடுக்கப்படும். எவ்வாறாயினும், ஒரு சில உள்ளூராட்சி நிறுவங்கள் இக் கழிவுகளை கையேற்காத நிலை காரணமாகப் பிரச்சினைகள் மேலெழுந்துள்ளன. மருத்துவத்திற்குப் பிற்பாடு வெளியகற்றப்படும் கழிவுகள் வைத்தியசாலைகளில் தொற்று நீக்கிய பிற்பாடு, உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு வெளியகற்றும் பொருட்டு வழங்கப்படுமெனும் தெளிவுத் தன்மை காணப்படாமையால் இத்தகைய அடிப்படையில் கையேற்காத நிலை ஏற்பட்டுள்ளது. உள்ளூராட்சி நிறுவனங்களில் கழிவு வெளியகற்றும் செயற்பாட்டில் ஈடுபடுகின்ற ஊழியர்களை அறிவூட்டுவதே சிறந்த தீர்வாகக் காணப்படுகின்றது. நடப்பு நிதி ஏற்பாட்டு நிலைகளைக் கருத்திலெடுத்து தொடர்புடைய அறிவூட்டல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

வைத்தியர் அனில் ஜாசிங்க
செயலாளர்